12184

A2

OFFICE OF THE DIRECTOR
CHENNAI-600 010
SOCIAL DEFENCE DEPT.

**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – சமூகப் பாதுகாப்பு – இராணிப்பேட்டை, சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பாதுகாவலராக பணிபுரிந்த திரு.கை.நாகராஜன் என்பவர் பணியிடை மரணமடைந்தது – அன்னாரின் வாரிசுதாரர் திரு.நா.சதீஷ்குமார் என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – தனியர் பணியில் சேர்ந்த நாளான 16.09.2016 முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [சந8(2)] துறை**

அரசாணை (3ப) எண். 11

நாள் 17.08.2022
சுபகிருது, ஆவணி 01,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்க:–**

1. அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.02.2021
2. சமூகப் பாதுகாப்பு ஆணையரின் கடித எண்.7024/அ2/2017, நாள் 04.07.2022

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் குறித்து ஏனையவற்றுள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:–

"(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1–ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்".

Scanned by CamScanner

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கடிதத்தில், இராணிப்பேட்டை, சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பாதுகாவலராக பணிபுரிந்த திரு.கை.நாகராஜன் என்பவர் 03.12.2005 அன்று பணியிடை மரணமடைந்ததை தொடர்ந்து, அன்னாரின் வாரிசுதாரர் திரு.நா.சதீஷ்குமார் என்பவரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து தனியர் திரு.நா.சதீஷ்குமார் 16.09.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிபுரிந்து வருவதாகவும், தனியரின் பணியும் நடத்தையும் திருப்திகரமாக உள்ளதெனவும் தெரிவித்து தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 16.09.2016 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசை வேண்டியுள்ளார்.

3. சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, இராணிப்பேட்டை, சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் பாதுகாவலராக பணிபுரிந்த திரு.கை.நாகராஜன் என்பவர் 03.12.2005 அன்று பணியிடை மரணமடைந்ததை தொடர்ந்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக செங்கல்பட்டு, ஆத்தூர், அரசு மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட அன்னாரின் வாரிசுதாரர் திரு.நா.சதீஷ்குமார் என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 16.09.2016 முற்பகல் முதல் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை – 10
திரு.நா.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர்,
(சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை–10 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை –18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–1.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்,
(சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை–10 வழியாக)

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9
இருப்பிட தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner